தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 21-5-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## நீர்போக உருளைக்கிழங்கிற்கு விலை உயர வாய்ப்பு

உருளைக்கிழங்கு உலகின் முக்கியப்பயிர்களில் ஒன்றாகும், அரிசி, கோதுமை மற்றும் மக்காச்சோளத்திற்கு அடுத்தபடியாக உருளைக்கிழங்கு உள்ளது. உலகில் பல இலட்சக்கணக்கான மக்களின் முக்கிய உணவுப்பொருளான உருளைக்கிழங்கு உலர்சத்துக்கள், புரதம் மற்றும் கலோரிகள் ஆகியவற்றை அதிகமாக கொண்டு உணவுப் பாதுகாப்பினை அளிக்கிறது. 2011ம் ஆண்டில் உலக அளவில் 19.24 மில்லியன் எக்டர் பரப்பளவில் பயிரிடப்பட்டு 374.38 மில்லியன் டன்கள் உருளைக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவில் 2011-12ல் உருளைக்கிழங்கு 19.06 இலட்சம் எக்டர் பரப்பளவில் பயிரிடப்படடு 414 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. இந்தியாவின் மொத்த உற்பத்தியில் உத்திரப்பிரதேசம், மேற்குவங்காளம், பஞ்சாப், பீகார் மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் 80 சதவீதத்தை உற்பத்தி செய்கின்றன. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிறுவனத்தின் கணக்கீட்டின்படி 2011-12ல் தமிழ்நாட்டில் உருளைக்கிழங்கு 4,910 எக்டர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு 1,04,890 டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இந்தியாவிலிருந்து 2012-13ல் 74,635 டன்கள் உருளைக்கிழங்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. இது கடந்த வருட ஏற்றுமதியைக் காட்டிலும் 26 சதவீதம் குறைவாகும்.

திண்டுக்கல், நீலகிரி, கிருஷ்ணகிரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில் மலைப்பகுதிகளில் மட்டுமே உருளைக்கிழங்கு பயிரிடப்படுகிறது. நீலகிரி விவசாயிகள் பிப்ரவரி மாதத்தில் விதைத்த நீர்போக உருளைக்கிழங்கு மே மற்றும் ஜீன் மாதங்களில் அறுவடைக்கு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் முக்கிய இரண்டு இரகங்களான குப்ரி ஜோதி மற்றும் குப்ரி கிரிராஜ் பயிரிடப்படுகின்றன. நீலகிரி உருளைக்கிழங்கு சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் வேலூர் ஆகிய சந்தைகளிலும் மற்றும்

கேரளாவிலும் அதிகமாக விற்பனை செய்யப்படுகிறது. மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் (NCMS) இந்திய அளவில் சிறந்து விளங்குகின்ற ஒரு விற்பனை மையம் ஆகும். தற்போது மேட்டுப்பாளையம் விற்பனை மையத்தில் குவிண்டாலுக்கு உருளைக்கிழங்கு ரூபாய் 2000 முதல் ரூபாய் 2100 வரை விற்பனை ஆகிறது. நீலகிரியில் வறட்சியின் காரணத்தால் பரப்பளவு குறைந்துள்ளது. இதனால் மேட்டுப்பாளையம் சந்தையில் வரத்து குறைந்து உருளைக்கிழங்கிற்கு அதிக விலை கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

உருளைக் கிழங்கின் தரம், அளவு, நிறம், மற்றும் நீண்ட கால சேமிப்புத் திறன் பொருத்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. மேட்டுப்பாளையம் சந்தைக்கு வரும் உருளைக் கிழங்கு ஆட்கள் மூலம் தரம் பிரிக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகிறது. உருளைக் கிழங்கு தலைராசி (40 – 60 மிமீ), இராசி (20 - 40 மிமீ), பொடி (10-20 மிமீ) மற்றும் தள்ளு (10 மிமீ) என்று தரம் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. தரமான நீலகிரி உருளைக்கிழங்கு மஞ்சள் நிறத் தோலுடன் காணப்படும். அதிக சுவையாகவும், கடினமாகவும் இருக்கும். இதை அதிக நாட்களுக்கு சேமித்து வைக்கலாம். இதனால் நீலகிரி உருளைக் கிழங்கு அதிக விலை பெறுகிறது. அதே சமயம் வெளி மாநிலங்களிலிருந்து வரும் உருளைக்கிழங்கு கடினமாக இல்லாமல் குறைந்த சுவையும் கொண்டு குறைந்த நாட்களே சேமிக்க முடியும் என்பதால் விலையும் குறைந்து விடுகிறது. வெளி மாநிலத்திலிருந்து மேட்டுப்பாளையம் சந்தைக்கு வரும் உருளைக் கிழங்கு குறைந்த விலையில் கிடைப்பதால் 80 சதவீதம் விதை மற்றும் உணவு வகைகளுக்கும் 20 சதவீதம் சிப்சிற்கும் பயன் படுத்தப் படுகிறது. அதே போல் நீலகிரி உருளைக் கிழங்கு 95 சதவீதம் உணவு வகைகளுக்கும், 5 சதவீதம் சிப்சிற்கும் பயன் படுத்தப் படுகிறது.

உருளைக்கிழங்கினை அதிகபட்சமாக ஆறு மாதங்கள் குளிர்ப்பதன கிடங்குகளில் சேமித்து வைக்க முடியும். மேட்டுப்பாளையத்தில் குளிர்ப்பதன கிடங்கு வசதிகள் உள்ளன. கர்நாடகா மற்றும் உத்திரப்பிரதேசத்தில் இருந்து வரும் கிழங்குகள் இங்கு சேமித்து வைக்கப்பட்டு விதைக் கிழங்குகளாகப் பயன்படுத்தபடுகிறது. குளிர்ப்பதன கிடங்குகளில் சேமித்து வைக்க கிலோவிற்கு ரூ.0.30 வீதம் மாதத்திற்கு செலவாகிறது. ஜனவரி மாதம் முதல் மே வரை அதிகமான அளவு கிழங்குகளில் சேமித்து வைக்கப்பட்டு ஜுன்-ஜுலையில் பயன்படுத்தப்படுகிறது, 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை குளிர்பதன கிடங்குகளில் சேமிக்கப்படும் கிழங்குகள் விதைகளாக பயன்படுத்தப்படுகிறது. ஆனால், நீலகிரி மாவட்டத்தில் விளையும் உருளைக்கிழங்கு மிகவும் குறைவாகவே குளிர்ப்பதன

கிடங்குகளில் சேமித்து வைக்கப்படுகிறது இதற்கு முக்கிய காரணம் ஆகஸ்டு மாதத்தில் கர்நாடகா மாநிலத்திலுள்ள ஹாசன் பகுதிகளிலிருந்து அதிக வரத்துக்கள் வருவதால் விலை குறைய வாய்ப்பு அதிகம்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கி வரும் தேசிய வேளாண் புதுமைத் திட்டத்தின் உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் மேட்டுப்பாளையத்தில் உள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நிலவிய கடந்த 10 ஆண்டு (2004-2013) உருளைக்கிழங்கு விலைகளை ஆய்வு செய்தது. அதன்படி, நீர்போக உருளைக்கிழங்கு அறுவடையின் போது (மே 2013, ஜுன் 2013) கிலோவிற்கு ரூ.24 முதல் ரூ.25 வரை விவசாயிகளுக்கு விலை கிடைக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஜுலை 2013ல் கிலோவிற்கு ரூபாய் 27 முதல் 28 வரை விலை கிடைக்க வாய்ப்புள்ளது. ஆகையால், இவ்விலையைக் கருத்தில் கொண்டு அறுவடை செய்த உருளைக்கிழங்கினை சேமித்து வைத்து ஜுலை 2013ல் விற்பனை செய்யும்படி விவசாயிகள் பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -**


உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641003.
தொலைபேசி- 0422-2431405


**தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -**


முனைவர்.என். செல்வராஜ்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம்,
விஜயநகரம், உதகமண்டலம்-643001
தொலைபேசி : 0423-2442170
கைபேசி : 94430 52219